# அடிப்படைகளுடன் தொடங்குதல்

*சபையின் நடத்துவத்துவம் பற்றிய படிப்பொன்றை நாம் துவங்குவதால், நடத்துவத்துவம் என்றால் "என்ன" என்பது பற்றி நாம் அறிவது அவசியமாய் உள்ளது. நடத்துவத்துவம் என்றால் என்ன? எது ஒருவரை நடத்துனராக்குகின்றது? நடத்துவத்துவத்தின் ஆதார மூலம் எது?*

## நடத்துவத்துவம் என்றால் என்ன?

*நடத்துவத்துவம் என்பதை விளக்கப்படுத்துவது அவ்வளவு சுலபமான தாயிருப்பதில்லை. விரியன் பாம்பு ஒன்றை நாம் கண்டால் அது பாம்புதான் என்று அறிந்துகொள்வதுபோல நடத்துவத்துவத்தைக் காணும்பொழுது நாம் அதை அறிந்து கொள்ளலாம் என்று நாம் நினைக்கின்றோம், ஆனால் நடத்துவத்துவத்தின் பண்பை விளக்கியுரைத்தல் என்பது விரியன் பாம்பைப் பற்றி விளக்கியுரைத்தலை விடக் கடினமானதாக இருக்கலாம்.*

*இயேசு ஒரு நடத்துனராயிருந்தார் என்று நாம் அறிகின்றோம்; அவர் தம்மைப் பின்பற்றும் சீஷர்களைக் கொண்டிருந்தார். மோசே ஒரு நடத்துனராய் இருந்தார்; அவர் இஸ்ரவேல் மக்களை எகிப்தில் அடிமைத் தனத்தில் இருந்து விடுவித்து, வனாந்தர வழியாக கானான் நாட்டின் எல்லை வரையிலும் வழிநடத்தினார். நெகேமியா ஒரு நடத்துனராய் இருந்தார்; அவர் எருசலேமின் மதில்களை மீண்டும் கட்டுவதில் இஸ்ரவேல் மக்களை வழிநடத்தினார். இந்த மனிதர்களின் (இவர்களில் இயேசு மனிதரைக் காட்டிலும் மேலானவராயிருந்தார்) பண்புகளுடைய தொகுப்பானது நடத்துவத்துவத்தின் விளக்கமாக உள்ளதா?*

*நாம் மாபெரும் நடத்துனர்களைப் பற்றி நினைக்கும் பொழுது, மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், மற்றும் லால்பகதூர் சாஸ்திரி போன்ற தேசீயத் தலைவர்களைப் பற்றிப் பெரும்பாலும் எண்ணுவதுண்டு. இருப்பினும், நடத்துனர்கள் என்பவர்கள் நல்ல வழியிலோ அல்லது மோசமான வழியிலோ (மக்களை) வழிநடத்தக் கூடும். அட்டிலா ஹன் என்பவனும் ஒரு நடத்துனராகத்தான் இருந்தான் மற்றும் ஹிட்லரும் கூட அவ்வாறே இருந்தான். இயேசு ஒரு நடத்துனரா யிருக்கையில், முகம்மதுவும் ஒரு நடத்துனராக இருந்தார், மற்றும் அது போன்றே ஜிம் ஜோன்ஸ் மற்றும் வெர்னன் ஹோவெல் (டேவிட் கோரேஷ்) என்ற மார்க்கப் பிரிவு நடத்துனர்களும் இருந்தார்கள்.*

*ஒரு நடத்துனர் எவ்வாறு இருப்பதில்லை என்பதை நாம் அறிகின்றோம்.*

கிராமத்திலிருந்த கடை ஒன்றிற்கு மூச்சு வாங்க வேகமாய் ஓடி வந்த ஒரு இளைஞன், கடைக்காரரிடம் "முப்பது பேர் கொண்ட குழு ஒன்று ஒரு மணி நேரத்திற்கு முன்பு இவ்வழியாகக் கடந்து சென்றதா?" என்று கேட்டார். கடைக்காரர், "ஆம்" என்று பதில் அளித்தார். "நான் அவர்களை அடைய வேண்டும்; நான் அவர்களின் நடத்துனன்'' என்று அவர் கூறினார். இப்படிப்பட்ட மனிதர் நடத்துனரல்ல என்று நாம் அறிகின்றோம், ஆனால் நடத்துனர் என்பவர் யார்? நடத்துவத்துவம் என்றால் என்ன?

## பல்வேறு விளக்கங்கள்

நடத்துவத்துவம் என்பது பல்வேறு வழிகளில் விளக்கப்பட்டுள்ளது. நடத்துனர் என்பவர், ''ஒரு குழுவை அல்லது செயல்பாட்டை இயக்கி, கட்டளையிட்டு அல்லது வழிநடத்துகின்றவர்'' என்று அகராதி விளக்கு கின்றது. நடத்துவத்துவத்தின் விளக்கங்கள் என்பது இலக்குகளை அமைத்து அவற்றை அடைவதில் ''ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு குழுவின் செயல் பாடுகளின்மீது செல்வாக்குச் செலுத்தும் செயல்முறை'' என்பதிலிருந்து மற்றவர்களின் நடக்கையை வழிநடத்தும் அல்லது கட்டுப்படுத்தும் செயல்முறை, மற்றவர்களை ஏவுதல் அல்லது ஊக்கப்படுத்துதல் என்பது வரை பல்வேறு வழிகளில் விளக்கப்படுகின்றது.[1]

மற்ற விளக்கங்களும் சாத்தியமானவைகளாய் உள்ளன. நடத்துவத் துவம் பற்றிய பல்வேறு விளக்கங்களை மறுகண்ணோட்டமிட்ட பிறகு, கென்னெத் O. கேன்கெல் என்பவர் தமது கண்டறிதல் பற்றிப் பின்வருமாறு தொகுத்துரைத்தார்:

> … நடத்துவத்துவம் என்பது ஒரு *திறமையாக* உள்ளது; நடத்துவத்துவம் என்பது *மற்ற* மக்களுடன் பணிபுரிதலை உள்ளடக்குகின்றது; மற்றும் நடத்துவத்துவம் என்பது ஒரு வகையான இலக்கை நோக்கி முன்னேறுதலை உள்ளடக்குகின்றது. இந்த மூன்று விஷயங்களையும் இப்புத்தகத்தின் வரைவெல்லைக்கு ஏற்புடைய விதத்தில் ஒரு விளக்கமாக உருவேற்றுவதென்றால், அது பின்வருவது போன்ற தாயிருக்கலாம்: *நடத்துவத்துவம் என்பது குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட ஒரு குழுவின் உறுப்பினரால் செயல்படுத்தப்படுவதாக, குறிப்பிட்ட காலத்தில் தனது குழுவின் நடக்கைகளை பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக் கூடிய இலக்குகளை நோக்கி நெறிப்படுத்தும் வகையில் மாற்றுவதால் விளைவை ஏற்படுத்தும் அவரது திறனை* விளக்குவதாக உள்ளது.[2]

நடத்துவத்துவத்தின் விளக்கங்கள் அடிக்கடி ஒரு குறிப்பிட்ட வகையான நடத்துவத்துவத்தை முன் குறிக்கின்றது. இதற்கு நேர்மாறாக, நாம் நடத்துவத்துவத்தின் எல்லா வகைகளையும் உள்ளடக்கி இந்தச் சொற்றொடரை விளக்கப்படுத்த விரும்புகின்றோம்.

## நமது விளக்கம்

எனவே, நடத்துவத்துவத்திற்கான நமது விளக்கம் இங்கு தரப்

படுகின்றது: முன் தீர்மானிக்கப்பட்ட இலக்கு அல்லது குறிக்கோளின் நிறைவேற்றத்தை நோக்கி தனி நபர்கள் அல்லது ஒரு குழுவின் வெளிப்படையான மற்றும் உணர்வுப்பூர்வமான வழிகாட்டுதல். இது குறைந்தபட்சம் இந்தப் பாடங்களில் நாம் ஆராய்கின்ற நடத்துவத்துவத்தின் வகையாய் உள்ளது.

இந்த விளக்கத்தின் ஒவ்வொரு பாகமும் முக்கியமானதாக உள்ளது. முதலாவது, நாம் விவரிக்கின்றபடியாக நடத்துவத்துவம் என்பது "வெளிப்படையானதாக/வேண்டுமென்றே செய்யப்பட்டதாக, உணர்வுப் பூர்வமானதாக" உள்ளது. அதாவது இது, "தற்செயலானதோ" அல்லது "உணர்வற்றதோ" அல்ல என்று அர்த்தமாகின்றது. சிலவேளைகளில் விளக்கப்படும் வகையில், நடத்துவத்துவம் என்பது, நன்மைக்கோ அல்லது தீமைக்கோ "மற்றவர்கள் மீது செல்வாக்குச் செலுத்துதல்" என்று அர்த்தப் படுகின்றது. இது நடைபெறுகின்றது என்பதில் ஐயமில்லை. நாம் எல்லாரும் நமது வாழ்வு, நமது நடக்கை, நமது வார்த்தைகள், மற்றும் நமது எண்ணப் போக்குகள் ஆகியவற்றினால் மற்றவர்கள்மீது செல்வாக்குச் செலுத்து கின்றோம். இருப்பினும் இது நாம் இந்தப் பாடங்களில் பயன்படுத்தும் "நடத்துவத்துவத்தின்" அர்த்தத்தை முற்றிலுமாகத் தெரிவிப்பதில்லை.

இரண்டாவது, நடத்துவத்துவம் என்பது "தனிநபர்களாக அல்லது ஒரு குழுவிற்கான வழிகாட்டுதலாக" உள்ளது. தலைவர் ஒருவர் தனிமையில் இருக்க முடியாது. விளக்கத்தின்படி காண்கையில், நடத்துவத்துவம் என்பது நடத்துனர் மற்றவர்களை இயக்குதல் என்பதை உள்ளடக்குவதாக இருக்கின்றது. நடத்துனர் என்பவர் பின்பற்றாளர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

மூன்றாவது, நடத்துவத்துவம் என்பது "முன் தீர்மானிக்கப்பட்ட இலக்கு அல்லது குறிக்கோளின் நிறைவேற்றத்தை நோக்கி" ஒரு குழுவை வழிநடத்துதல் என்பதாக உள்ளது. இதுதான் நடத்துவத்துவம் என்பதைப் பற்றியதாக உள்ளது: சில பெரிய நோக்கம் அல்லது இலக்கை அடையும்படி மற்றவர்களைச் செயல்பட வைத்தல். அந்த இலக்கானது நடத்துனருடைய சிந்தையில் உள்ளது, ஆனால் அவர் வழிநடத்துகின்றவர்களின் சிந்தையில் (விசேஷமாக முதலில்) அது இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

இந்த விளக்கமானது நடத்துவத்துவத்தின் எல்லா வகைகளையும் உள்ளடக்குமளவுக்கு விசாலமானதாக இருக்கின்றது. ஒரு முதலாளி தனக்கென்று அதிகம் பணம் ஈட்டுதல் என்பதே இலக்காக இருப்பினும், அந்த இலக்கை நிறைவேற்றுவதை நோக்கி தனது தொழிலாளர்களை/ வேலையாட்களை வழிநடத்துகின்றார். அவர்கள் பணிபுரியும் பொழுது அவர்களின் கூலிகளைக் கொடுப்பதினாலும், அவர்கள் வேலை செய்யத் தவறும்போது அவர்களை வெளியேற்றுவதினாலும் அவர் இதைச் செய்கின்றார். அது இந்த விளக்கத்தின் மூலமாக நடத்துவத்துவத்தில் உள்ளடக்கப்படுவதாயிருக்கும். வங்கிக் கொள்ளையன் ஒருவன் துப்பாக்கி முனையில் மற்றவர்களை இயக்கி, வங்கிப் பெட்டகத்தில் உள்ள பணத்தைக் கொள்ளையடிக்கும்படி அதைத் தனக்காகத் திறக்கச் செய்கிறான். அதுவும் கூட ஒரு வகையான நடத்துவத்துவமாகவே உள்ளது.

*சபையில் நடத்துனர்கள், முதலாளி மற்றும் வங்கிக் கொள்ளையன் ஆகியோருக்குள்ள பொதுவான பண்புகள் சிலவற்றைக் கொண்டுள்ளார் கள். அவர்களும்கூட மக்கள் சிலவற்றைச் செய்யும்படி அவர்களை முன்னின்று வழிகாட்ட, வழிநடத்த அல்லது இயக்க முயற்சிக்கின்றார்கள். சபை நடத்துனர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் உள்ள வேறுபாடு என்பது "நடத்துவத்துவம்" என்ற வார்த்தையின் அர்த்தத்தில் இருப்ப தில்லை, ஆனால் நாடப்படும் இலக்குகளிலும் வழிநடத்துவதில் பயன் படுத்தப்படும் செயல்முறைகளிலுமே இருக்கின்றது.*

## *நடத்துவத்துவத்தின் ஆதார மூலம் என்ன?*

*ஒருவர் எவ்வாறு நடத்துனராகின்றார்? அந்தக் கேள்விக்கு நாம் பதில் அளிக்கும் முன்னரே, அது தொடர்பான இரு கேள்விகளை நாம் ஆலோசனை செய்ய விரும்புகின்றோம்.*

### இரு கேள்விகள்

*ஒவ்வொருவரும் நடத்துனராக இருக்கின்றாரா? ஒவ்வொருவருமே நடத்துனராக உள்ளார் என்று சிலர் கூறுகின்றனர். (நடத்துவத்துவத்தைப் பற்றி ஒருவர் தரும் விளக்கத்தைப் பொறுத்து) வரையறைக்குட்பட்ட கருத்தமைவில் இது உண்மையாக உள்ளது என்பதில் சந்தேகம் இல்லை. ஒவ்வொருவரும் மற்றவர்களின் மீது சில செல்வாக்கைச் செயல்படுத்தி, குறிப்பிட்ட திசைகளில் மற்றவர்களை நகர்த்துவிக்கின்றார். இவ்வகையான நடத்துவத்துவமானது பெரும்பாலும் உணர்வுப் பூர்வமற்றதாக உள்ளது; மக்கள், தாங்கள் வழிநடத்துவதையோ அல்லது வழிநடத்தப்படுவதையோ அறியாதிருக்கின்றர். கிறிஸ்தவர்கள் தங்கள் செல்வாக்கை அறிந்தவர்களாய் மற்றவர்களை பரலோகத்தை நோக்கி வழிநடத்த அந்த செல்வாக்கை நோக்கத்துடன் பயன்படுத்துபவர்களாய் இருக்க முடியும், அவர்கள் இவ்வாறே இருக்க வேண்டும்.*

*எல்லா சூழ்நிலையிலும் எல்லாரும் நடத்துனராய் இருப்பதில்லை. அவ்வாறு இருக்க முடியுமென்றால், "நடத்துனர்" மற்றும் "நடத்துவத்துவம்" என்ற வார்த்தைகளுக்கு அர்த்தமே இல்லை.*

*நடத்துனர்கள் (நடத்துனர்களாகவே) பிறக்கின்றார்களா அல்லது நடத்துனர்களாக்கப்படுகின்றார்களா?* ஒரு கருத்தமைவில், நடத்துனர்கள் (நடத்துனர்களாகவே) "பிறக்கின்றனர்" - குறைந்தபட்சம், அவர்களின் பிறப்பு மற்றும் முந்திய அனுபவங்கள் அவர்களைத் நடத்துவத்துவத் திற்கென்று விசேஷமாய் தகுதிப்படுத்துகின்றன. "அருங்கொடை" தலைவர்கள் என்று நாம் அழைக்கின்ற மக்களை நாம் எல்லாரும் கண்டிருக்கின்றோம்; மக்கள் அவர்களை விருப்பத்துடனே பின்பற்று கின்றனர். எவ்வித முயற்சியும் செய்யப்படாமலேயே மக்கள் அவர்களைப் பாராட்டுபவர்களாக அல்லது பின்பற்றுபவர்களாக அவர்களைச் சுற்றிக் குழுவாகச் சூழ்ந்து கொள்கின்றனர். அவர்கள் பணி நிலைகளுக்குத் தேர்ந்து கொள்ளப்பட்டாலும், அல்லது நிறுவனங்களின் தலைவர்களாய்

இருக்கும்படி உயர்த்தப்பட்டாலும், வழிநடத்துதல் மற்றும் இயக்கப் படுதலுக்குத் தங்களிடம் மற்றவர்கள் திரும்புவதை அவர்கள் காண்கின்ற னர். அத்துடன் கூடுதலாக, சிலர் நடத்துவத்துவத் திறமையுடன் பிறந்தவர் களாக, தாங்கள் விரும்புகின்றபடி மற்றவர்களைச் செய்ய வைக்க இணங்கப் பண்ணுகின்றவர்களாக அல்லது சில பணிகளை நிறைவேற்றுவதற்கு வேலையாட்களையும் பொருட்களையும் முடிந்த அளவுக்குச் சாத்தியமான வகையில் ஒருங்கமைக்கக் கூடியவர்களாக இருக்கின்றனர்.

பவுலாக அழைக்கப்பட்ட அப்போஸ்தலரான சவுல் என்பவர் புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் "பிறவி நடத்துனராக" இருந்தவர்களுக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளில் ஒன்றாக இருந்தார். யூதத்துவத்தின் (ஒரு) தலைவராயிருந்த (பிலி. 3:4-7) அவர், மனமாற்றப்பட்ட பொழுது தேவனு டைய கிருபையினாலே கிறிஸ்தவ மார்க்க நடத்துனரானார். எந்த நிறுவனத் திலும் அல்லது குழுவிலும் பவுல் ஒரு நடத்துனராய் இருந்திருக்க முடியும் என்பது போலவே உள்ளது.

இதற்கு மறுபுறத்தில், பணிக்குத் தகுதியற்றவர்களாய்க் காணப்படும் மனிதர்கள் சில வேளைகளில் நடத்துவத்துவத்தில் சூழ்நிலைகளினால் கட்டாயப்படுத்தப்பட்டு அமர்த்தப்படுகின்றனர். வழிநடத்தப் பிறந்தவர் களாகவோ அல்லது நடத்துவத்துவத்திற்கான பயிற்சி பெற்றவர்களாகவோ இல்லாத மனிதர்கள் எவ்வாறாயினும் வழிநடத்தும்படி வற்புறுத்தப் படுவதை சபைகளில் நான் கண்டுள்ளேன். (அப்படிப்பட்ட சபை நடத்துனர்களைக் குறித்து நாம் ஒருவேளை அதிகம் விமர்சிக்கிறோம்.)

சிலர் நடத்துனர்களாகும்பொழுது, மற்றவர்களைவிட மேலான முறையில் தகுதி பெற்றிருப்பினும், வழிநடத்தும் பணியை அதிகம் செயல்திறனுடன் செய்வது எப்படி என்பதை எவரொருவரும் கற்றுக் கொள்ளக் கூடும். இந்தக் கருத்தில், நடத்துனர்கள் என்பவர்கள் "ஏற்படுத்தப்"படக்கூடும்.

## தேவனிடமிருந்து வந்த ஈவு என்ற வகையில் நடத்துவத்துவம்

நடத்துவத்துவத்தின் உண்மையான ஆதார மூலமாக இருப்பவர் தேவனே ஆவார்! நடத்துவத்துவம் என்பது தேவனிடத்திலிருந்து வருகின்ற ஈவாக உள்ளது என்று புதிய ஏற்பாடு போதிக்கையில் (அதைப் பற்றி) நாம் வியப்படையக் கூடாது! வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், தேவன் தம்முடைய மக்களுக்கென்று நடத்துனர்களைத் தேர்ந்தெடுத்து, அழைத்து, அவர்களை நியமித்திருந்தார். அவர் அந்த நடத்துனர்களுக்கு வல்லமையும் அளித்திருந்தார். அவர் வாக்குறுதியற்ற வகையில் சில கருத்துக்களைப் பயன்படுத்தினார். மோசே ஏற்கனவே நடத்துவத்துவத்திற்கு முயற்சி செய்து அதில் தவறியிருந்தார்; கிதியோன் இணங்கச் செய்ய கடினமான நியாயாதிபதியாய் இருந்தார்; எட்டு பையன்களையுடைய ஒரு குடும்பத் தில் தாவீது எல்லாருக்கும் இளையவராயிருந்தார், மற்ற யாவரும் அவரைக் காட்டிலும் வசீகரமுடையவர்களாய் இருந்திருப்பார்கள் என்பது உறுதி;

நம்புவதற்கரிதான அப்போஸ்தலத்துவத்தைப் பெற்றுக் கொள்ளும்படி அழைக்கப்பட்ட அப்போஸ்தலர்கள் யாவரும் பொதுவாக இழிவாய்க் கருதப்பட்ட கலிலேயாவிலிருந்து வந்தவர்களாய் இருந்தார்கள். தேவன் இவர்களை பெலப்படுத்தியதால் வழிநடத்துவதில் இவர்கள் யாவரும் மாபெரும் நடத்துனர்களாயினர். தேவன் இதை அற்புத விதமாய்ச் செய்திராவிட்டாலும், தேவன் இன்றைய நாட்களிலும் சபையில் நடத்துனர்களை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் இருந்த நடத்துவத்துவத்தை ஒரு ஈவு என்ற வகையில் பேசுகின்ற மூன்று வசனப்பகுதிகள் உள்ளன. முதலாவது நாம், "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்" (எபே. 4:12, 13). இரண்டாவதாக, நாம், ரோமர் 12:6-8ல், ''நமக்கு அருளப்பட்ட கிருபையின்படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்க தரிசனஞ் சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக் கேற்றதாகச் சொல்லக்கடவன்; ஊழியம் செய்கிறவன் ஊழியத்திலும் போதிக்கிறவன் போதிக்கிறதிலும் புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லு கிறதிலும் தரித்திருக்கக் கடவன். பகிர்ந்து கொடுக்கிறவன் வஞ்சனை யில்லாமல் கொடுக்கக் கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக் கடவன்; ..." என்று வாசிக்கின்றோம். KJVயில், "ஆளுபவர் ஜாக்கிரதையாய் இருக்கக் கடவர்" என்றுள்ளது. 26 மொழிபெயர்ப்புகளில் இருந்து புதிய ஏற்பாடு என்ற நூலின்[3] மொழிபெயர்ப்புகளில் உள்ளவை பின்வருமாறு: "ஆளுகின்றவர் ..." (Con); "... அதிகாரத்தில் உள்ளவர் ..." (TCNT); "தலைமை வகிக்கின்றவர் ..." (Wey); "... நீங்கள் ஒரு தலைவராயிருந்தால் ..." (NEB). NIVயில் ''... அது நடத்துவத்துவமாயிருந்தால் ...'' என்றுள்ளது. மூன்றாவதாக, 1 கொரி. 12:28ல் பவுல், "தேவனானவர் சபையிலே முதலா வது அப்போஸ்தலர்களையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றா வது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும் ... ஏற்படுத்தினார்" என்று எழுதினார். 26 மொழிபெயர்ப்புகளில் இருந்து புதிய ஏற்பாடு என்ற நூலின்படி, ''நிர்வாகிகள்'' என்பதற்குப் பதிலாக, மற்ற பதிப்புகளில், "அரசுகள்" (KJV), "ஒருங்கமைப்பாளர்கள்" (Phi), "அவர்களை வழிநடத்த வல்லமை" (NEB), "ஞானமுள்ள வழிகாட்டிகள்" (Bas), "மற்றவர்களை ஒன்றுகூடிப் பணியாற்றச் செய்யக் கூடியவர்கள்'' (Tay), அல்லது ''மேலாளர்கள்'' (Beck) என்பவை பயன்படுத்தப்படுகின்றன. NIVயில் ''நிர்வாகத்திற்கான வரங்கள்'' என்றுள்ளது, மற்றும் NRSVயானது "நடத்துவத்துவத்தின் வடிவங்கள்" என்று கூறுகின்றது.

*நடத்துவத்துவம் என்பது இன்றைய நாட்களில் எப்படி ஒரு ஈவு என்று நினைக்கப்பட முடியும்?* அநேகமாக, பெரும்பாலான மற்றவர்களை விடவும் அதிகமாகக்கூட, நடத்துனர்கள் என்பவர்கள் தங்களைப்பற்றி

“சுயமாய் - ஏற்பட்ட மனிதர்கள்” என்று நினைத்துக் கொள்பவர்களாய் இருக்கின்றனர். அவர்கள், “நான் பணியாற்றியுள்ளேன். நான் பள்ளி சென்றுள்ளேன். நான் நீண்ட காலம் வாழ்ந்து, நல்ல பல பெரிய விஷயங் களைச் செய்துள்ளேன். நான் மரியாதை அளிக்கப்படவும் பின்பற்றப் படவும் தகுதியுடையவனாக இருக்கின்றேன். மற்றவர்கள் மீதான எனது நடத்துவத்துவம் எனக்களிக்கப்பட்ட ஈவு என்று எவரொருவரும் எவ்வாறு கூற முடியும்?” என்று கூறலாம். நடத்துவத்துவம் என்பது உண்மையிலேயே ஒரு ஈவாக உள்ளது அல்லது தேவனால் தரப்பட்ட திறமையாக உள்ளது என்று நாம் காண்பதற்கு ஆழ்ந்த பல சிந்தனைகள் நமக்கு உதவலாம்.

ஒரு புறத்தில், நடத்துனர்கள் ஏற்படுத்தப்படுவதில்லை, ஆனால் பிறவியிலேயே அவ்வாறு உள்ளனர் என்றால் (அல்லது ஏற்படுவதை விட அதிகமாய்ப் பிறவியிலேயே அவ்வாறுள்ளனர் என்றால்) நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் தேவனிடமிருந்து வருகின்றன என்பதை சபை நடத்துனர்கள் நினைவில் வைக்க வேண்டும் (யாக். 1:17). அவர்கள் தங்கள் பெற்றோர்களைத் தேர்ந்து கொள்ளவில்லை, அல்லது தங்களின் இயல்பான திறமைகளுக்கு அவர்கள் பொறுப்பாளிகள் அல்ல. யாரேனும் ஒருவர், உயரமாக, பலமாக, நல்ல தோற்றமுடையவராக, மதிநுட்பமான வராக மற்றும் “இயல்பாகவே பிறவி நடத்துனராக” இருந்தால், அதைப் பற்றி அவர் பெருமை பாராட்ட இடமொன்றும் இல்லை. மனித நிலைப்பாட்டிலிருந்து, அவர் சரியான பெற்றோரைக் கொண்டிருக்க நேர்ந்ததாகவே கருதப்பட வேண்டும். தேவனுடைய கண்ணோக்கிலிருந்து, அவர் தம்மை இவ்வித கொடைகளுடன் பிறக்கச் செய்தார் என்பதை அவர் உணர வேண்டும்; தேவனுக்கே மகிமை உண்டாவதாக! நிச்சயமாகவே இயற்கையிலேயே நடத்துனராயிருந்த பவுல், தமது திறன்கள் யாவும் தேவனிடத்திலிருந்து வந்தன என்று ஒப்புக் கொண்டார். அவர், “ஆகிலும், நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்” (1 கொரி. 15:10) என்று கூறினார்.

மறுபுறத்தில், நடத்துனர்கள் பிறவிலேயே உண்டாகிறார்கள் என்பதற்கு மாறாக, ஏற்படுத்தப்படுகின்றார்கள் என்றால், நான் இன்னமும் கூட, வாழ்வில் எல்லா நன்மைகளும் தேவனிடமிருந்து வருகின்றன என்பதை நினைவுகூருதல் அவசியமாய் உள்ளது. மனிதர்கள் தலைவர்களாவதற்கும் நடத்துவத்துவத்தில் வெற்றி அடைவதற்கும் அவர்களுக்கு உதவக் கூடிய சூழ்நிலைகள் கடைசியில் தேவனிடத்திலிருந்து வந்தது என்பதைப் பின்னோக்கிப் பார்க்கும் போது காண முடியும். ஒருவர், “நான் கடினமாய் உழைத்தேன் மற்றும் கடினமாய்ப் படித்தேன்” என்று ஒருவர் மறுத்துரைக் கலாம் - ஆனால் அவர் உழைப்பதற்கும் படிப்பதற்கும் விருப்பத்தை எங்கிருந்து பெற்றார்? பெற்றோரிடமிருந்தா அல்லது தாத்தா பாட்டியிடம் இருந்தா? நண்பரிடமிருந்தா அல்ல அயலாரிடமிருந்தா? ஆசிரியரிட மிருந்தா? “தனது சொந்த” முயற்சியில் வெற்றி பெறும் ஒவ்வொருவரும் தாம் சிறப்பானதைச் செய்யத் தம்மைத் தூண்டியதில் பெரும் பணியாற்றிய யாரேனும் ஒருவரை அநேகமாய் நினைவுகூரக் கூடும். அந்த யாரேனும் ஒருவர் என்பவரை அவர் எங்கிருந்து பெற்றார்? தேவனிடத்திலிருந்து

*தானே! வெற்றிக்கான சூழ்நிலைகளைத் தேவன் அருளிரக்கத்துடன் அருளாதிருந்தால், மக்கள் வெற்றியடைந்து விட மாட்டார்கள்!*

*உதாரணமாக, ஒரு மூப்பராவதற்கான தகுதிகளைப் பற்றி நினைத்துப் பாருங்கள். முதலாவதாக மூப்பர் ஒரு கிறிஸ்தவராயிருக்க வேண்டும். அவர் தாம் கிறிஸ்தவராவதற்கான வாய்ப்பளித்தமைக்காகத் தேவனுக்கு நன்றிக் கடன் உடையவராய் இருப்பதில்லையா? இரட்சகரையும் சுவிசேஷத்தை யும் கொடுத்தமைக்காக மட்டும் இன்றி, இரட்சிப்பின் நற்செய்தியைத் தம்மிடத்தில் முதன்முதலாய்க் கொண்டு வந்த பிரசங்கியார் அல்லது போதகருக்காகவும் அவர் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.*

*மூப்பரைப் பண்புபடுத்துகின்ற தனிப்பட்ட பண்புகளின் மேம் பாட்டைக் குறித்து ஆழ்ந்து சிந்தியுங்கள்: அவர் தேவனால் ஆசீர்வதிக்கப் படுவதினால் இவைகள் அவருடைய வாழ்வில் கூட்டப்படுகின்றன. அவர், தாம் வேதாகமத்தை வாசிக்கின்ற காரணத்தினால் அவற்றை மேம்படுத்திக் கொண்டதாக நினைக்கலாம், ஆனால் அவருக்கு வேதாகமத்தைக் கிடைக்கச் செய்தது யார்? அவர் அதை வாசிக்கக் கூடியவராக்கியது யார்? வசனம் பிரசங்கிக்கப்படுதலைக் கேட்பதற்கு அவரை அனுமதித்தது யார்? ஒரு வேளை அவர் தேவபக்தியுள்ள பெற்றோரைக் கொண்டிருந்தபடியால் அவரும் தேவபக்தியுள்ளவராயிருக்கலாம்; ஆனால் அந்தப் பெற்றோரை அவருக்குக் கொடுத்தது யார்? அவர் மற்ற கிறிஸ்தவர்களுடன் இணைவு கொண்டிருந்ததால், உண்மையுள்ள பிரசங்கியார்களால் வேதாகமம் போதிக்கப்பட்டதால் மற்றும் கிறிஸ்தவத் தலைவர்களால் இரக்கம் நிறைந்த வகையில் நடத்தப்பட்டதால் அவர் ஆவிக்குரிய தன்மையை மேம்படுத்தி யிருக்கலாம். அப்படியென்றால், அவர் இப்படிப்பட்ட ஆசீர்வாதங் களுக்குத் தகுதியான ஏதொன்றையும் தாமே செய்யவில்லை என்றாகின்றது. அவை யாவையும் தேவனால் அருளப்படுகின்றன! சபையை வழிநடத்தத் தகுதியான மனிதர்களை மேம்படுத்துவதற்குத் தேவன் இவ்விதமான வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றார்.*

*சரியான வகைப்பட்ட குடும்பம் இல்லாமல் எந்த மனிதரும் ஒரு மூப்பர் என்ற வகையில் ஏற்புடைய பணி புரிய முடியாது. சரியான வகைப்பட்ட மனைவியுடன் மட்டுமே அவர் உபசரிப்புத் தன்மையுடையவராக, தம் வீட்டாரை நன்கு விசாரிக்கின்றவராக, தம் பிள்ளைகளை "சகல நல்லொழுக்கத்துடன் கீழ்ப்படியச் செய்கின்றவராக," மற்றும் சபைக்குப் புறம்பே உள்ளவர்களாலும் நற்சாட்சி பெற்றவராக இருக்க முடியும் (1 தீமோ. 3:2-7). நல்ல மனைவி என்பவள் தேவனிடமிருந்து வரும் ஈவாக இருக்கின்றாள் (நீதி. 19:14; 18:22). மற்றும், ஒரு மனிதர் நற்குணமுள்ள மனைவியைக் கொண்டிருக்கலாம், ஆனால் பிள்ளைகள் இல்லாதிருந்தால் அவர் மூப்பராகப் பணியாற்ற இயலாது (தீத்து 1:6). பிள்ளைகள் தேவனிடத்திலிருந்து வருகின்ற கொடையாக உள்ளனர் (சங். 127:3). அத்துடன், அவருடைய குழந்தைகள் உண்மையுள்ள கிறிஸ்தவர்களாய் வளர்ந்தால், அதற்கு அவர் தேவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்; ஏனெனில் அவரும் அவர் மனைவியும் அவர்களை சரியான வழியில் வளரச் செய்வதற்கு தங்களால் இயன்ற அளவு சிறந்த முயற்சிகளைச் செய்தாலும் கூட, அவர்கள்*

(விசுவாசத்தை விட்டு) விலகிச் சென்று விடலாம். (பெற்றோரின் தவறுகள் இருக்கும் போது கூட) பிள்ளைகள் விசுவாசம் நிறைந்தவர்களாய் இருத்தல் என்பதும் கூட அவரிடத்திலிருந்தே வருகின்றது.

நடத்துவத்துவம் என்பது ஒரு ஈவாக உள்ளது என்ற உணர்ந் தறிதலானது சபையில் ஒரு நடத்துனரிடத்தில் எவ்வித செயல் விளைவை ஏற்படுத்தும்? முதலாவது, அது அவரைத் தாழ்மையில் நிலைத்திருக்க உதவ வேண்டும். நடத்துவத்துவத்தை அவர் தம் சொந்தத் தகுதியினால் அடையவில்லை; அவர் தமக்குள் இருக்கின்ற நன்மையான விஷயம் எதுவாயிருப்பினும், அதற்கு அவர் தேவனுக்கே கடன்பட்டுள்ளார்.

இரண்டாவது, அது அவர் தமது பணிப் பொறுப்பை கொள்கையுடன் காத்துக் கொள்ள உதவ வேண்டும். சபையில் உள்ள மற்றவர்களுடன் அவருடைய உறவுமுறை என்னவாக உள்ளது? அவர் ஒரு தாலந்தை - நடத்துவத்துவத்தின் தாலந்து - உடையவராய் இருக்கின்றார். அவர்களும் கூட பணம் ஈட்டுதல், உற்சாகப்படுத்துதல், இளைஞர்களுக்கு அறைகூவல் விடுத்தல் முதலிய பல வகைப்பட்ட தாலந்துகள் உடையவர்களாய் இருக்கின்றனர். இந்தத் தாலந்துகள் யாவையும் சபையின் நன்மைக்கென்று பயன்படுத்தப்பட வேண்டும். அவருடைய(தாலந்)து மிகவும் முக்கியத் துவம் வாய்ந்ததாக உள்ளதா? அது அதிகம் கவனிக்கப்படக் கூடியதாக, அதிகம் வெளியரங்கமானதாக இருக்கலாம், ஆனால் அது அதிகம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதில்லை. அது அவரை மற்றவர்களைக் காட்டிலும் மேன்மையானவராக்குவதில்லை. சபை நடத்துனர்கள் என்பவர்கள் முக்கோணத்தின் உச்சியில் உள்ளனர், மற்ற உறுப்பினர்களைக் காட்டிலும் உயர்தளத்தில் உள்ளனர் என்ற படிநிலைக் கண்ணோட்டத்தை நாம் நம்மை விட்டு அகற்ற வேண்டும்.

மூன்றாவது, அது நடத்துனர் தம்மைத் தாமே, "நடத்துவத்துவத்தின் தாலந்தைத் தேவன் எனக்குத் தந்திருக்கிறார் என்றால், நான் அதை அவரது மகிமைக்காகப் பயன்படுத்துவதையும் மற்றும் இயன்ற அளவு அதிகமாய் அதை சபையில் பயன்படுத்துவதையும் அவர் விருப்புடன் நோக்குவ தில்லையா?" என்று கேட்டுக் கொள்ளச் செய்ய வேண்டும். சபைக்குப் பயன்படவும், தேவனுக்கு மகிமை செலுத்தவும் கிறிஸ்தவர்கள் தங்கள் தாலந்துகளைப் பயன்படுத்த வேண்டும் என்பதற்காகவே தேவன் கிறிஸ்தவர்களுக்குத் தாலந்துகளைக் கொடுக்கிறார்.

பின்வருவதை ஆழ்ந்து சிந்தியுங்கள்: ஒரு மனிதர் மூப்பராயிருப்பதற் கான தாலந்தை அவருக்குத் தேவன் கொடுத்திருக்கிறார் என்றால், அவ்வாறிருக்கும் வாய்ப்பை மறுப்பது என்பது அவருக்குத் தவறானதாக உள்ளதா?

## முடிவுரை

நடத்துவத்துவம் என்பது, "முன் தீர்மானிக்கப்பட்ட இலக்கு அல்லது குறிக்கோளின் நிறைவேற்றத்தை நோக்கி தனி நபர்கள் அல்லது குழுவை வழிநடத்தும் நோக்கமும் உணர்வும் கொண்ட வழிநடத்துதல் என்பதாக

*உள்ளது."* தேவன் தாம் எப்பொழுதும் செய்திருக்கின்றபடி, இன்றைய நாட்களிலும் தம்முடைய மக்களுக்கு நடத்துனர்களை அளிக்கின்றார். சபையில் உள்ள பலர் நடத்துனர்களாயிருக்கும்படி (அருளிரக்கத்துடன்) அழைக்கப்பட்டுள்ளனர். நடத்துனராயிருக்கக் கூடியவர்கள், தொடக்க கால சபையை பவுல் வழிநடத்தியதுபோலவே வழிநடத்துவார்களா அல்லது அவர்கள், தேவன் தம் மக்களுக்கு நடத்துனர்களாயிருக்கும்படி அருளிரக்கத்துடன் அழைத்த அழைப்பை மறுத்து விடுவார்களா?

---

*குறிப்புகள்:*

[1]*இந்த மற்றும் பிற விளக்கங்களுக்கு,* J.J. Turner, *Leadership and Church Growth* (Shreveport, La.: Lambert Book House, 1976), 9-10 *என்ற நூலைக் காணவும்.* [2]Kenneth O. Gangel, *Leadership for Church Education* (Chicago: Moody Press, 1970), 12-13. [3]Curtis Vaughan, ed., *The New Testament From 26 Translations* (Grand Rapids, Mich.: Zondervan, 1967).

## சுருக்கக் குறியீடுகளின் விளக்கம்

Alf - The New Testament (Henry Alford)
ASV - The American Standard Version
Bas - The New Testament in Basic English
Beck - The New Testament in the Language of Today (William F. Beck)
Ber - The Berkeley Version of the New Testament (Gerrit Verkuyl)
Con - The Epistles of Paul (W.J. Conybeare)
KJV - The King James Version
Knox - The New Testament in the Translation of Monsignor Ronald Knox
Mof - The New Testament: A New Translation (James Moffatt)
Mon - The Centenary Translation: The New Testament in Modern English (Helen Bartlett Montgomery)
NASB - The New American Standard Bible
NEB - The New English Bible
NIV - The New International Version
Nor - The New Testament: A New Translation (Olaf M. Norlie)
NRSV - The New Revised Standard Version.
Phi - The New Testament in Modern English (J. B. Phillips)
RSV - The Revised Standard Version
Tay - Living Letters: The Paraphrased Epistles; Living Gospels: The Paraphrased Gospels; Living Prophecies: The Minor Prophets Paraphrased and Daniel and the Revelation (Kenneth N. Taylor)
TCNT - The Twentieth Century New Testament
Wey - The New Testament in Modern Speech (Richard Francis Weymouth)
Wms - The New Testament: A Translation in the Language of the People (Charles B. Williams)